**நீதித்துறை நடுவர் எண் 1. நீதிமன்றம், புதுச்சேரி.**

முன்னிலை – வே.சேரலாதன்,
நீதித்துறை நடுவர் எண்.1, புதுச்சேரி.
2025 ஆம் ஆண்டு, ஜூன் மாதம் 16 ஆம் நாள், திங்கட்கிழமை
சுருக்கு பட்டிகை வழக்கு எண்.159/2019
வழக்கு பதிவேட்டு எண். PYPY03-000583-2019

| **வரிசை எண்.** | **குற்றவியல் நடைமுறை விதிகள், 2019 – விதி 106 இன் கீழ் கோரப்பட்டுள்ள விவரங்கள்** | |
|---|---|---|
| 1 | காவல் நிலையம் மற்றும் குற்ற விவரம் | இலாசுபேட்டை கா. நி, புதுச்சேரி<br>குற்ற எண். 126/2018<br>இதச பிரிவுகள் 341 மற்றும் 353 உ/இ 34 |
| 2 | குற்றம் சாட்டப்பட்டவரின் விபரம் | |
| | எ 1) திரு. கோபி,(வயது 45/2018)<br>த/பெ. வெங்கடேசன்<br>26H, விடுதலை நகர்,<br>முதலியார்பேட்டை, புதுச்சேரி. | எ 2) திரு. சசிக்குமார், (வயது 37/18)<br>த/பெ. கண்ணியப்பன்,<br>3, சுப்ரமணிய கோவில் தெரு,<br>இலாசுபேட்டை, புதுச்சேரி. |
| | எ 3) திரு.வேல்முருகன்,<br>(வயது27/18)<br>த/பெ. சங்கர்,<br>46, வினாயகர் கோவில் தெரு,<br>இலாசுபேட்டை, புதுச்சேரி. | எ 4) திரு.இராக்பெட்ரிக்ஸ்,<br>(வயது 26/18)<br>த/பெ. ஜோசப்,<br>20, ஏழாவது தெரு, குறிஞ்சி நகர்<br>இலாசுபேட்டை, புதுச்சேரி. |
| 3 | குற்றம் நடந்த நாள் மற்றும் நேரம் | 26.11.2018, காலை 1 மணி |
| 4 | புகார் வாக்குமூலம் | 26.11.2018 |
| 5 | கைது | 26.11.2018 |
| 6 | நீதிமன்ற காவல் | 26.11.2018 |
| 7 | பிணை | 06.12.2018 |
| 8 | குற்ற இறுதி அறிக்கை | 01.02.2019 |
| 9 | விசாரணை தொடங்கிய நாள் | 31.07.2019 |
| 10 | எதிரிகளிடம் குற்றச்சாட்டு வனையப்பட்டு கேள்வி கேட்கப்பட்ட நாள் | 06.08.2019 |

CHERALADHAN Digitally signed by CHERALADHAN
Date: 2025.06.16 15:48:53 +0530

| | | |
|---|---|---|
| 11 | எதிரிகளிடம் கு.வி.மு.ச பிரிவு 313 ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட நாள் | 28.02.2025 |
| 12 | எதிரிகள் தலைமறைவான நாள் | எதிரி 2– 26.06.2019 முதல் 31.07.2019 வரை |
| 13 | சாட்சிகள் விசாரிக்கப்பட்ட நாள் | |
| | அ.சா.1– 03.10.2019<br>அ.சா.2– 03.10.2019<br>அ.சா.3– 16.10.2019<br>அ.சா.4– 16.10.2019<br>அ.சா.5– 06.11.2019 | அ.சா.6– 06.11.2019<br>அ.சா.7– 20.04.2022<br>அ.சா.8– 20.04.2022<br>அ.சா.9– 12.12.2023 |
| 14 | மேலவை நீதிமன்றத்தால் வழங்கப்பட்டுள்ள தடை உத்தரவுகளின் விவரம் | இல்லை |
| 15 | இடைக்கால மனுக்களின் விவரம் | இல்லை |
| 16 | விசாரணை முடிவுற்ற நாள் | 11.06.2025 |
| 17 | உத்தரவு | 16.06.2025<br>எதிரிகள் இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்யப்படுகிறார். |
| 18 | காலதாமதத்திற்கான காரணம் :– இவ்வழக்கானது கடந்த 2019 ஆம் ஆண்டு கோப்புக்கு எடுக்கப்பட்ட நிலையில், கடந்த 12.12.2023 வரை அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணை மேற்கொள்ளப்பட்டுவந்ததால், தாமதம் ஏற்பட்டுள்ளது. | |

இவ்வழக்கானது, இது நாள் வரையில், இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த நிலையில், அரசு தரப்பில் கற்றறிந்த குற்றவியல் துறை வழக்கு நடத்துனர் அவர்களும், குற்றம் சாட்டப்பட்டவர்களின் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. U. வடிவரசன் அவர்களும் முன்னிலையாகி தங்களது தரப்பு வாதுரைகளை முன் வைத்துள்ளார்கள். அவர்களின் வாதுரைகளையும், வழக்காவணங்களையும் பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## தீர்ப்புரை

இவ்வழக்கானது இந்திய தண்டணைச் சட்டம்(இதச) பிரிவுகள் 341 மற்றும் 353 உ/இ 34 இன் கீழ் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

**அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்**

**1.** புகார்தாரர் அரசு விரைவு போக்குவரத்து கழகத்தில் ஓட்டுனராக பணி புரிந்து வருகிறார். கடந்த 26.11.2018 அன்று த.நா. 09 AN 0300 என்ற அரசு பேருந்தை புதுச்சேரி கிழக்கு கடற்கரை சாலையில், இலாசுபேட்டை சிவாஜி சிலை அருகே, இவ்வழக்கின் எதிரிகள் நால்வரும் சட்டவிரோதமாக வழிமறித்து உள்ளார்கள். மேலும் அந்த பேருந்தின் கண்ணாடியை கற்களால் தாக்கி சேதப்படுத்தியும் உள்ளார்கள். அதன் தொடர்ச்சியாக அவர்களை கைது செய்ய முற்பட்ட காவலர்களை தடுத்ததன் காரணமாக இவ்வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

**அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் சாண்றாவனங்கள்:-**

**2**. இவ்வழக்கில் அரசுத் தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.9 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.18 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் திரு.தங்கமலை **அ.சா.1** ஆகவும், திரு. விஜயகாந்த் **அ.சா.2** ஆகவும், திரு.பிரசாந்த் **அ.சா.3** ஆகவும், திரு. மணிகண்டன் **அ.சா.4** ஆகவும், திரு.வெங்கடாபதி **அ.சா.5** ஆகவும், திரு.அருள்மணி **அ.சா.6** ஆகவும், திரு.தமிழரசன் **அ.சா.7** ஆகவும், திரு. ஐய்யனார் **அ.சா.8** ஆகவும் மற்றும் திரு. சாகிர் ஹுசைன் **அ.சா.9** ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளனர்.

**3.** மேலும் இவ்வழக்கின் புகார் மனு **அ.சா.ஆ.1** ஆகவும், கைப்பற்றுதல் மகஜரிலுள்ள அ.சா.3 இன் கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.2** ஆகவும், கைப்பற்றுதல் மகஜரிலுள்ள அ.சா.3 இன் கையொப்பம் **அ.சா.ஆ.3** ஆகவும், கைப்பற்றுதல் மகஜரிலுள்ள அ.சா.4 இன் கையொப்பம் **அ.சா.ஆ.4** ஆகவும், எதிரி 1 இன் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.4 இன்

கையொப்பம் **அ.சா.ஆ.5** ஆகவும், கைப்பற்றுதல் மகஜரிலுள்ள அ.சா.7 இன் கையொப்பம் **அ.சா.ஆ.6** ஆகவும், குற்ற விவரப் படிவத்தில் உள்ள அ.சா.7 இன் கையொப்பம் **அ.சா.ஆ.7** ஆகவும், எதிரி 1 இன் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.8 இன் கையொப்பம் **அ.சா.ஆ.8** ஆகவும், முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.9** ஆகவும், குற்ற விவரப் படிவம் **அ.சா.ஆ.10** ஆகவும், உடைந்த கண்ணாடிகள் தொடர்பான கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.11** ஆகவும், TVS Jupiter இருசக்கர வாகனத்தின் கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.12** ஆகவும், சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.13** ஆகவும், கோபி என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.14** ஆகவும், இரும்பு கம்பியின் கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.15** ஆகவும், படிவம் 95 (CP எண்.314/2018) **அ.சா.ஆ.16** ஆகவும், படிவம் 95 (CP எண்.316/2018) **அ.சா.ஆ.17** ஆகவும் மற்றும் படிவம் 95 (CP எண்.313/2018) **அ.சா.ஆ.18** ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் உடைந்த கண்ணாடி துகள்கள் சான்று பொருள் 1 ஆகவும், கருங்கல் சா.பொ.2 ஆகவும், TVS Jupiter இருசக்கர வாகனம் சா.பொ.3 ஆகவும், Suzuki Access இருசக்கர வாகனம் சா.பொ.4 ஆகவும், இரும்பு பைப் சா.பொ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

**<u>தீர்மானிக்கப்படவேண்டிய பொருண்மைகள்:-</u>**

**4.** இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் இதச பிரிவுகள் 341 மற்றும் 353 உ/இ 34 இன் கீழ் குற்றம் புரிந்துள்ளார்களா? என்பதையும் அவ்வாறெனில் குற்றம் சாட்டப்பட்ட நபர்களுக்கு வழங்கப்படவேண்டிய தண்டனை என்ன என்பதையும் தீர்மானிக்க வேண்டுமென இந்த நீதிமன்றம் கருதுகிறது.

**<u>விளக்கவுரை</u>**

**5.** குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை நிரூபணம் செய்வதற்காக, அரசுத்தரப்பில் புகார்தாரரான

திரு. தங்கமலை அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவரது சாட்சியத்திலிருந்து, கடந்த 26.11.2018 அன்று அதிகாலை 01.00 மணியளவில், அவர் கும்பகோணத்தில் இருந்து சென்னையை நோக்கி, SETC பேருந்தை இயக்கி சென்றுள்ளார் என்பது தெரியவருகிறது. மேலும் அந்த பேருந்தை புதுச்சேரியில் உள்ள சிவாஜி சிலை வழியாக இயக்கி சென்ற போது அடையாளம் தெரியாத நான்கு நபர்கள், இரண்டு இருசக்கர வாகனத்தில் வந்து பேருந்தை வழிமறித்ததாகவும், அதன் தொடர்ச்சியாக கல்லை எறிந்து அந்த பேருந்தின் கண்ணாடியை உடைத்தாகவும் புலப்படுகிறது. அதன் தொடர்ச்சியாக தப்பித்து சென்ற எதிரிகளை காவலர்கள் பிடித்து, காவல் நிலையத்திற்கு கொண்டு சென்றதாகவும், அவர் காவல் நிலையத்தில் புகார்/அ.சா.ஆ.1 யை வழங்கியதாகவும் தெரியவருகிறது.

**6.** புகார்தாரர் இயக்கிய பேருந்தில் நடத்துனராக பணியாற்றிய திரு. விஜயகாந்த்/அ.சா.2 தனது சாட்சியத்தில், இரண்டு இருசக்கர வாகனத்தில் வந்த மூன்று நபர்கள், பேருந்தின் கண்ணாடியை அடித்து உடைத்தாக சாட்சி அளித்துள்ளார். அதன் பின்னர் காவல் நிலையம் சென்றபோது காவலர்கள் மூன்று பேரை கைது செய்து வைத்திருந்ததாகவும், காவல் நிலையத்தில் வைத்து தான் எதிரிகளை பார்த்தாகவும் சாட்சியம் அளித்துள்ளார் என்பது தெரியவருகிறது. மற்றொரு கண்ணுற்ற சாட்சியாக முன்வைக்கப்பட்டுள்ள திரு. தமிழரசன்/அ.சா.7 தன்னுடைய சாட்சியத்தில், இவ்வழக்கில் தொடர்புடைய பேருந்தில் பயணம் செய்ததாகவும், இலாசுபேட்டை அருகே மூன்று நபர்கள் பேருந்தின் கண்ணாடியை உடைத்துவிட்டு இருசக்கர வாகனத்தில் சென்றதாகவும் சாட்சியம் அளித்துள்ளார் என்பது புலப்படுகிறது. மேலும் அத்தாட்சி மற்றும் குற்ற விவரப் படிவத்தில் உள்ள கையொப்பத்தை காவல் நிலைத்தில் வைத்து மேற்கொண்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார் என்பதும், அதில் உள்ள விவரங்கள் அவருக்கு தெரியாது என்பதும் புலப்படுகிறது.

**7.** இவ்வழக்கின் எதிரிகளை கைது செய்ததாக முன்வைக்கப்பட்டுள்ள காவலர்கள் திரு. வெங்கடபதி/அ.சா.5 மற்றும் திரு. அருள்மணி/அ.சா.6 ஆகியோர்களின் சாட்சியத்தில் இருந்து கடந்த 25.11.2018 அன்று இரவு அவர்கள் இருவரும் இலாசுபேட்டை காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் ரோந்து பணியில் ஈடுபட்டு இருந்ததாக தெரியவருகிறது. அப்போது இரவு 12.10 மணியளவில், நான்கு நபர்கள் வாகனங்களின் கண்ணாடிகளை உடைப்பதாக தகவல் கிடைத்ததாகவும், அவர்களை தடுத்தபோது, அ.சா.5 மற்றும் அ.சா.6 பயணம் செய்த வாகனத்தின் மீது, அந்த நான்கு நபர்கள் பயணம் செய்த வாகனம் மோதியதாக தெரியவருகிறது. அப்போது மூன்று நபர்களை அவர்கள் பிடித்து காவல் நிலையம் கொண்டு சென்றதாகவும் ஒருவர் மட்டும் தப்பித்து விட்டதாகவும் தெரியவருகிறது. அதன் தொடர்ச்சியாக இரவு 01.45 மணியளவில் ஓட்டுனர் ஒருவர் பேருந்து கண்ணாடி உடைக்கப்பட்டது தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளதாகவும் தெரியவருகிறது.

**8.** மேலும் விசாரணை அதிகாரியான திரு. சாகிர் ஹுசைன் அவர்களின் சாட்சியத்திலிருந்து, அவர் இவ்வழக்கின் புலன் விசாரணை மேற்கொண்டுள்ளார் என்பதும் அதன் தொடர்ச்சியாக சாட்சிகளின் முன்னிலையில் வழக்கு சொத்துக்களை கைப்பற்றியுள்ளதாகவும் தெரியவருகிறது. மேலும் இவ்வழக்கின் புலன் விசாரணை முடிந்த பின்னர் எதிரிகள் நான்கு பேர் மீதும், குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்று தெரியவருகிறது.

**<u>வாதுரை</u>**

**9.** எதிரிகளின் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதுரையில், இவ்வழக்கின் குற்றச்சாட்டுகளை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யவில்லை என

முன்வைத்துள்ளார். மேலும், புகார்தாரர் மற்றும் அவருடன் பணியாற்றிய அ.சா.2 ஆகியோரின் சாட்சியங்கள் ஒன்றுக்கொன்று முரண்பட்டு இருப்பதாகவும் முன்வைத்துள்ளார். மேலும் புகார்தாரரான அ.சா.1, தனது வாய்மொழி சாட்சியத்தில் முன்வைத்துள்ள பொருண்மைகளுக்கும், அவர் வழங்கிய புகாரில் முன்வைத்துள்ள பொருண்மைகளுக்கும் முரண்பாடுகள் இருப்பதாக முன்வைத்துள்ளார். அதுமட்டுமின்றி இவ்வழக்கின் எதிரிகளை புகார்தாரரோ, கண்ணுற்ற சாட்சியங்களோ சம்பவ இடத்தில் பார்க்கவில்லை எனவும், மற்றும் வழக்கு விசாரணையின் போது நீதிமன்றத்தில் அவர்களை அடையாளப்படுத்தவில்லை எனவும் முன்வைத்துள்ளார். மேலும், காவலர்களான அ.சா.5 மற்றும் அ.சா.6 ஆகியோர்களின் சாட்சியத்தில் இருந்து, எதிரிகள் அரசு அதிகாரிகளை பணி செய்யவிடாமல் தடுத்ததாக எவ்வித பொருண்மையும் துலங்கவில்லை எனவும் முன்வைத்துள்ளார். அதன் காரணமாக எதிரிகளை இவ்வழக்கில் இருந்த விடுதலை செய்ய வேண்டியுள்ளார்.

**<u>தீர்வு</u>**

**10.** இவ்வழக்கின் சாட்சியங்களை முழுமையாக பரிசீலணை செய்ததிலிருந்து, நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தபோது புகார்தாரரோ, கண்ணுற்ற சாட்சியங்களாக முன்வைக்கப்பட்டுள்ள நபர்களோ, பேருந்தின் கண்ணாடியை உடைத்தாக கூறப்படும் நபர்களை சம்பவ இடத்தில் வைத்து பார்க்கவில்லை என சாட்சியம் அளித்துள்ளார்கள் என்பது புலப்படுகிறது. மேலும், புகார் அளிக்க சென்றபோது காவல் நிலையத்தில் காவலர்கள் கைது செய்து வைத்திருந்த நபர்களை பார்த்ததாகவே சாட்சியம் அளித்துள்ளார்கள். அதுமட்டுமின்றி, புகார்தாரர் தன்னுடைய சாட்சியத்தில் நான்கு நபர்கள் பேருந்தின் கண்ணாடியை உடைத்தாக சாட்சியம் அளித்துள்ள நிலையில், அதே பேருந்தில் பயணம் செய்த அ.சா.2 மற்றும் அ.சா.7 ஆகியோர் தங்களது

சாட்சியத்தில் பேருந்தின் கண்ணாடியை மூன்று நபர்கள் உடைத்தாகவே சாட்சியம் அளித்துள்ளதால், அவர்களின் சாட்சியத்தில் உள்ள முரண்பாடு, அரசு தரப்பு வழக்கின் மீது இந்நீதிமன்றத்திற்கு சந்தேகத்தை எழுப்புகிறது. மேலும் சம்பவம் நிகழ்ந்த போது, எதிரிகளை புகார்தாரரோ, இதர கண்ணுற்ற சாட்சியங்களோ பார்க்கவில்லை என்பது அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து இந்நீதிமன்றத்திற்கு புலப்படுவதால், புகார் மனு/அ.சா.ஆ.1 ஆவணத்தில் எதிரிகளின் பெயர்களை புகார்தாரர் எவ்வாறு குறிப்பிட்டார் என்ற கேள்வி இந்நீதிமன்றத்திற்கு எழுகிறது.

**11.** மேலும் காவலர்களான அ.சா.5 மற்றும் அ.சா.6 ஆகியோரின் சாட்சியங்களிலிருந்து, எதிரிகள் நால்வரும் அவர்களை அரசு பணி செய்யவிடாமல் தடுத்தாகவோ, அவர்களை தாக்கியதாகவோ இந்நீதிமன்றத்திற்கு புலப்படவில்லை. ஆகையால், அரசு தரப்பில் முன்வைத்ததது போல எதிரிகள் புகார்தாரர் இயக்கி சென்ற பேருந்தினை சட்டவிரோதமாக வழிமறித்தார்களா என்பதையும், அரசு ஊழியர்களை பணி செய்யவிடாமல் தடுத்தார்களா என்பதையும் இந்நீதிமன்றத்தால் சந்தேகத்திற்கு இடமின்றி தீர்மானம் செய்ய இயலவில்லை.

**12.** முடிவாக, இவ்வழக்கில் வழங்கப்பட்ட சாட்சியங்களிலிருந்து எதிரிகள் மீது வனைப்பட்டுள்ள இ.த.ச. பிரிவுகள் 341 மற்றும் 353 உ/இ 34 இன் கீழான குற்றச் சாட்டுகளை அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், எதிரிகள் குற்றமற்றவர்களாக கருதப்படும் அனுமானத்தையும், அரசுத்தரப்பில் பொய்பிக்க தவறியுள்ளார்கள் என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து, அவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள, இந்திய தண்டணைச் சட்டப் பிரிவுகள் 341 மற்றும் 353 உ/இ 34 இன் கீழான குற்றச்சாட்டுகளுக்கு அவர்கள் குற்றவாளிகள் அல்ல

எனத் தீர்மானித்து அவர்களை கு.வி.மு.ச பிரிவு 255(1) இன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

**13.** ஆகையால், இவ்வழக்கில் எதிரிகளால் இயற்றிக்கொடுக்கப்பட்ட பிணை முறி பத்திரம் இரத்தாக உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் அரசு தரப்பில் கைப்பற்றப்பட்டுள்ள வழக்கு சொத்தான உடைந்த கண்ணாடி துகள்கள் மற்றும் இரும்பு கம்பி ஆகியவற்றை அழிக்க உத்தரவிடப்படுகிறது. மேலும், PY 05 E 4657 மற்றும் PY01 CS 3472 ஆகிய இருசக்கர வாகனங்களை அதன் உரிமையாளர்கள் வசம் ஒப்படைக்கவும், அதன் பொருட்டு அதன் உரிமையாளர்கள் ஏற்கனவே ஏதேனும் பிணை பத்திரம் இயற்றிக் கொடுத்திருந்தால் அவற்றை இரத்து செய்தும் உத்தரவிடப்படுகிறது. மேலும், அந்த இருசக்கர வாகனங்களின் நிரந்தர அனுபோகத்தை அவற்றின் உரிமையாளர்களுக்கு வழங்கி உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு 2025 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 16 ஆம் நாளான இன்று திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

CHERALADHAN
Digitally signed by CHERALADHAN
Date: 2025.06.16 15:49:06 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,

புதுச்சேரி.

**<u>அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்</u>**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. தங்கமலை |
| அ.சா.2 | திரு. விஜயகாந்த் |
| அ.சா.3 | திரு. பிரசாந்த் |
| அ.சா.4 | திரு. மணிகண்டன் |
| அ.சா.5 | திரு. வெங்கடாபதி |
| அ.சா.6 | திரு. அருள்மணி |
| அ.சா.7 | திரு. தமிழரசன் |
| அ.சா.8 | திரு. ஐய்யனார் |
| அ.சா.9 | திரு. சாகிர் ஹுசைன் |

**<u>அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள்</u>**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | அ.சா.ஆ.1 | 26.11.2018 | புகார்மனு | அ.சா.1 |
| 2 | அ.சா.ஆ.2 | 26.11.2018 | கைப்பற்றுதல் மகஜரிலுள்ள அ.சா.3 இன் கையொப்பம் | அ.சா. 3 |
| 3 | அ.சா.ஆ.3 | 26.11.2018 | கைப்பற்றுதல் மகஜரிலுள்ள அ.சா.3 இன் கையொப்பம் | அ.சா.3 |
| 4 | அ.சா.ஆ.4 | 26.11.2018 | கைப்பற்றுதல் மகஜரிலுள்ள அ.சா.4 இன் கையொப்பம் | அ.சா.4 |
| 5 | அ.சா.ஆ.5 | 26.11.2018 | எதிரி 1 இன் ஒப்புதல் வாக்குமூலம் அ.சா.4 இன் கையொப்பம் | அ.சா.4 |
| 6 | அ.சா.ஆ.6 | 26.11.2018 | கைப்பற்றுதல் மகஜரிலுள்ள அ.சா.7 இன் கையொப்பம் | அ.சா.7 |
| 7 | அ.சா.ஆ.7 | 26.11.2018 | குற்ற விவரப் படிவத்தில் உள்ள அ.சா.7 இன் கையொப்பம் | அ.சா.7 |
| 8 | அ.சா.ஆ.8 | 26.11.2018 | எதிரி 1 இன் ஒப்புதல் வாக்குமூலம் அ.சா.8 இன் கையொப்பம் | அ.சா.8 |

| | | | | |
|---|---|---|---|---|
| 9 | அ.சா.ஆ.9 | 26.11.2018 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.9 |
| 10 | அ.சா.ஆ.10 | 26.11.2018 | குற்ற விவரப் படிவம் | அ.சா.9 |
| 11 | அ.சா.ஆ.11 | 26.11.2018 | உடைந்த கண்ணாடிகள் தொடர்பான கைப்பற்றுதல் மகஜர் | அ.சா.9 |
| 12 | அ.சா.ஆ.12 | 26.11.2018 | TVS Jupiter இருசக்கர வாகனத்தின் கைப்பற்றுதல் மகஜர் | அ.சா.9 |
| 13 | அ.சா.ஆ.13 | 26.11.2018 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை | அ.சா.9 |
| 14 | அ.சா.ஆ.14 | 26.11.2018 | கோபி என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி | அ.சா.9 |
| 15 | அ.சா.ஆ.15 | 26.11.2018 | இரும்பு கம்பியின் கைப்பற்றுதல் மகஜர் | அ.சா.9 |
| 16 | அ.சா.ஆ.16 | 26.11.2018 | படிவம் 95 (CP எண்.314/2018) | அ.சா.9 |
| 17 | அ.சா.ஆ.17 | 26.11.2018 | படிவம் 95 (CP எண்.316/2018) | அ.சா.9 |
| 18 | அ.சா.ஆ.18 | 26.11.2018 | படிவம் 95 (CP எண்.313/2018) | அ.சா.9 |

**எதிரி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் –**இல்லை

**சான்று பொருள்கள்:**

| | | | |
|---|---|---|---|
| 1 | சா.பொ.1 | 600 கிராம் எடையுள்ள உடைந்த கண்ணாடி துகள்கள் | அ.சா.9 |
| 2 | சா.பொ.2 | கருங்கல் ஜல்லி இரண்டு எண்ணிக்கை | அ.சா.9 |
| 3 | சா.பொ.3 | TVS Jupiter இருசக்கர வாகனம் | அ.சா.9 |
| 4 | சா.பொ.4 | Suzuki Access இருசக்கர வாகனம் | அ.சா.9 |
| 5 | சா.பொ.5 | இரும்பு பைப் | அ.சா.9 |

CHERALADHAN

Digitally signed by CHERALADHAN
Date: 2025.06.16 15:49:12 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,

புதுச்சேரி.